செ.வெ.எண்.75 நாள்: 28.08.2017

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 20 பயனாளிகளுக்கு நிலுவைத்தொகையான ரூ.1,50,000/-க்கான காசோலைகளையும், 7 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (28.08.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2016-2017-ம் ஆண்டிற்கான 5 மாத நிலுவைத்தொகையாக திருநெல்வேலி, பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம், சங்கரன்கோவில், ஆலங்குளம், திருவேங்கடம், தென்காசி, கடையநல்லூர், வீரகேரளம்புதூர், சிவகிரி ஆகிய வட்டங்களைச் சேர்ந்த 20 நபர்களுக்கு தலா ரூ.7500/- வீதம் ரூ.1,50,000/-க்கான காசோலைகளையும், முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பாக தொகுப்பு நிதி கல்வி உதவித்தொகையாக 1 நபருக்கும், ரூ.25,000/-க்கான காசோலையினை வங்கிக்கடன் வட்டி மானியமாக ரூ.12,649/-க்கான காசோலையினை 1 நபருக்கும், நாங்குநேரி வட்டத்தைச் சார்ந்த 1 பயனாளிக்கு நலிந்தோர் நல உதவித்தொகையாக ரூ.20,000/-க்கான காசோலையினையும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 4 பயனாளிகளுக்கு மாதம் ரூ.1000/- உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, முதிர்கன்னி உதவித்தொகை, பட்டா மாறுதல், குடிநீர், சாலை வசதிகள் உள்பட பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி, விரைவில் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு மற்றும் ஆட்சித்தலைவர் அவர்கள் மூலம் பெறப்பட்டு நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். விண்ணப்பதாரர்களுக்கு உடனுடக்குடன் பதில் அனுப்ப வேண்டும் என உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.சங்கரலிங்கம், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி